**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.46/2015 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.V.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | ராஜராஜேஸ்வரி | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 03.10.2024**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 8 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. Ex.A.1 – Certified copy of Sale deed dated 12.07.1974 in Doc.No.2360/1974.
2. Ex.A.2 – Certified copy of Sale deed dated 14.11.1974 in Doc.No.2965/1974.
3. Ex.A.3 – Certified copy of Sale deed dated 17.04.1976 in Doc.No.1037/1976.
4. Ex.A.4 – Certified copy of Sale deed dated 29.04.1998 in Doc.No.1349/1998.
5. Ex.A.5 – Certified copy of Gift deed dated 25.05.2006 in Doc.No.2845/2006.
6. Ex.A.6 – Certified copy of Lease deed dated 08.02.2008 in Doc.No.456/2008.
7. Ex.A.7 – Original E.C. dated 22.12.2014 in Certificate No.21161/2014.
8. Ex.A.7 – Original E.C. dated 22.12.2014 in Certificate No.21162/2014.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். என்னுடைய தந்தை லட்சுமண நாயர் கேரளா மாநிலம் கண்ணூர் கிராமம் பூர்வீகம் என்றால் சரிதான். என் குடும்பத்தில் நான்தான் மூத்தவர் என்றால் சரிதான். என் குடும்பத்தில் 2வது மூத்தவர் 1ம் பிரதிவாதி ஸ்ரீவல்சலன் என்றால் சரிதான். 2வது பிரதிவாதி என் சகோதரி தாட்சாயிணி என்றால் சரிதான். 3வது பிரதிவாதி என் சகோதரி ரமாதேவி என்றால் சரிதான். எனக்கு 1977ல் திருமணம் ஆனது என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆனதில் இருந்து என் கணவருடன் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்தை 12.09.1974ல் 18 சென்டை என்னுடைய தந்தை முத்துநாயக்கர் வகையறா என்பவரிடமிருந்து வா.சா.ஆ.1 கிரயம் பத்திரம் முன்னிலைக்கு கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். தாவா 2வது அயிட்ட சொத்தை 14.11.1974ல் 18 சென்டை என்னுடைய தந்தை ஞானசுந்தரம் என்பவரிடமிருந்து வா.சா.ஆ.2 கிரய பத்திரம் முன்னிலைக்கு கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். தாவா 1, 2 அயிட்ட சொத்துக்கள் காலி இடம் என்றால் சரிதான். இந்த வழக்கின் 5ம் பிரதிவாதி சுவாமிநாதன் எனது தாய்மாமன் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதிக்கும் பூர்வீகம் கேரளா என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி தற்போது மும்பையில் வசிக்கிறார் என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்தை வா.சா.ஆ.3 கிரய பத்திரம் முன்னிலைக்கு என் தந்தை 17.04.1976ல் 5ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தார் என்றால் அவ்வாறு கிரய பத்திரம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை, ஆனால் 5ம் பிரதிவாதியை சொத்தை பார்த்துக் கொள்ளுமாறு சொன்னார். வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தை சாட்சி பார்த்துவிட்டு, அந்த ஆவணம் கிரய பத்திரம் என்று கூறுகிறார். வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தில ' Land Ceiling என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால' அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.3 கிரய பத்திரம் எழுதிக் கொடுக்கும்போது தாவா 1வது அயிட்டம் காலி இடம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரய பத்திரம் ஏற்படுத்திய பிறகு 30 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2015ல் என் தந்தை தாவா 1வது அயிட்ட சொத்தை கிரயம' கொடுத்தார். என' அப்பா லட்சுமண நாயர் 15.03.1995ல' இறந்துவிட்டார' என்றால' சரிதான். என' தாயார' பார்வதி அம்மாள் 1992ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் அப்பா 1976ல் 5ம் பிரதிவாதிக்கு கிரயம்

கொடுத்த பிறகு சுமார் 15 வருடங்கள் வாழ்ந்தார் என்றால் சரிதான். எனக்கும், 5ம் பிரதிவாதிக்கும் தற்போது வரை சுமூகமான பேச்சுவார்த்தை உண்டு என்றால் உண்டு. தாவா 2வது அயிட்ட சொத்து 4வது பிரதிவாதிக்கு 29.04.1998ல் வா.சா.ஆ.4 முன்னிலைக்கு 2, 3 பிரதிவாதிகள் சார்பாக 1ம் பிரதிவாதி கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் கொடுத்த பவர் பத்திரத்தில் என் பெயர் இல்லை. வா.சா.ஆ.4 கிரயம் வாங்கும்போது தாவா 2வது அயிட்ட சொத்தானது காலி இடம்தான˙ என்றால் காலி இடமாகத்தான் இருந்தது. 1ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு குத்தகைக்கு விட்டு சம்பாதிக்குமாறு எந்த இடத்தை கொடுத்துள்ளார் என்றால் தாவா 2வது அயிட்ட சொத்தை தான் 4ம் பிரதிவாதி குத்தகைக்கு விட்டு சம்பாதிக்குமாறு 1ம் பிரதிவாதி கொடுத்தார். தாவா 2வது அயிட்ட சொத்தை 4ம் பிரதிவாதி குத்தகைக்கு விடவில்லை என்றும், 4ம் பிரதிவாதி சொத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா 1, 2 அயிட்ட சொத்தில் நான் எந்த காலத்திலும் வசித்தது இல்லை என்றால் சரிதான்.

(1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)